சுவிசேஷ கதையிலுள்ள முக்கிய இடங்களின் வரைப் படம்






# சுவிசேஷ கதை - பாகம் 1
# இயேசு - பிறப்பு தொடங்கி மறுரூபம் வரை.

## உள்ளடக்கம்


1. சுவிசேஷக் கதைக்கான அறிமுகமும் சரித்திர பின்னணியும் pg.10
   - மக்கபீன் எதிர்ப்பு தொடங்கி மகா ஏரோது வரை பிரதேசத்தினுடைய அரசியலின் குறு வரலாறு.
2. சுவிசேஷ கதையில் வரும் முதன்மைப் பாத்திரங்கள் pg.18
   - சுவிசேஷ கதையில் வரும் முதன்மை பாத்திரங்களின் பின்னணி.
3. தேவதூதனின் வருகை pg.23
   - லூக்கா 1:5-45 ரூ 57-66 இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்படல்.
4. இயேசுவின் பிறப்பு pg.29
   - மத்தேயு 1:18-25; லூக்கா 2:1-20 இயேசு பிறந்தார். மேசியாவின் பிறப்பை தேவதூதர்கள் மூலம் அறிந்த முதல் ஜனம் மேய்ப்பர்கள்
5. வான சாஸ்திரிகளும் நட்சத்திரமும். pg.35
   - மத்தேயு 2:1-23; லூக்கா 1:46-56 2:14-18. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் நட்சத்திரத்தின் பின்சென்று மேசிய ாவைக் காணல். அபாயம் நெருங்கியிருந்தது.
6. இயேசுவின் ஞானஸ்நானமும், பிசாசின் சோதனையும். pg.42
   - லூக்கா 3; மத்தேயு 3,4 யோவான் மூலம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல். பிறகு சாத்தான் மூலம் வனாந்திரத்தில் சோதனை.
7. கலிலேயாவின் வாழ்க்கைக்கு ஓர் அறிமுகம் pg.48
   - கலிலேயாவில் வாழ்க்கை - நாட்டின் மக்களும் பூகோளமும்.
8. “மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக மாற்றுவேன்” 12 சீஷர்களை அழைத்தல். pg.52
   - லூக்கா 5&6; மத்தேயு 4:18-22; மாற்கு 1:14-20 யோவான் 1:35-51. இயேசு 12 சீஷர்களைச் சந்தித்தலும் தேர்ந்தெடுக்கும் முறையும்.
9. குணமாக்கும் வல்லமையும் பாவ மன்னிப்பும் pg.58
   - மத்தேயு 4; லூக்கா 5; மாற்கு 2 இயேசுவின் போதனையும் அதற்கேற்ப அற்புதங்களும்.
10. மலைப்பிரசங்கம் - மத்தேயுவால் எழுதப்பட்டப்படி pg.65
    - மத்தேயு 5-7 இயேசு போதித்த பாக்கிய வார்த்தைகள்.
11. விசுவாசம், வல்லமை மற்றும் அதிகாரம் pg.71
    - மத்தேயு 8; மாற்கு 4&5; லூக்கா 8 இயற்கை மற்றும் பிசாசின் மீது வல்லமை.
12. இயேசுவும் யவீருவின் மகளும் pg.77
    - மாற்கு 5; மாற்கு எழுதின சாட்சியின்படி.
13. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் pg.81
    - மத்தேயு 14; யோவான் 6; மாற்கு 6; லூக்கா 9ஐ இணைத்துப் பார்த்தல் எல்லா சுவிசேஷங்களிலும் இக்கதை எழுதப்பட்டுள்ளது.
14. வெளிப்பாடும் மறுரூபமும். pg.87
    - மத்தேயு 16&17, மாற்கு 8&9, லூக்கா 9 இயேசு தான் யார் என்று சீஷர்களிடம் வினவுதலும் எருசலேமில் நடைபெறப் போகிற அபாயத்தையும் எச்சரித்தல்.
15. சுவிசேஷ கதைகளின் பாகம் 1ன் முடிவுரை. pg.93

குறிப்புகள் pg.96

யூதர்கள் பிலாத்துவை விரும்பவில்லை - யோசபெஸிலிருந்து அதிக குறிப்புகள்.



பொந்தியு பிலாத்து

ஏன் பிலாத்துவை யூதர்கள் விரும்பவில்லை என்பதற்கு யோசபெஸ் இரண்டு விவரங்களை எழுதியிருக்கிறார்.

1.பிலாத்து ரோம போர்க்கொடிகளையும் முத்திரைகளையும் எருசலேம் ஆலயத்தில் கொண்டு வந்தான். இந்த முத்திரைகளில் ராஜாக்களின் படங்கள் இருந்தபடியால் யூதர்களுக்கு இவை விக்கிரகங்களாகத் தென்பட்டன. பல யூதர்கள் இப்படிப்பட்ட முத்திரைகளை அகற்ற வேண்டுமென பிலாத்துவிடம் கண்டனம் தெரிவித்தனர். ஐந்து நாட்கள் இந்த மனுவை நிராகரித்தான். பின்பு அவர்களைக் கொன்றுவிடுவேன் என மிரட்டினான், சட்டத்தை மீறுவதைவிட இறப்பதேமேல் என்று இவர்கள் தரையிலே விழுந்து தங்கள் கழுத்துக்களை உடைத்துக்கொண்டனர். பிலாத்து அவர்களை கொல்ல மறுத்து பின்வாங்கி ஆலயத்தில் வைத்த முத்திரைகளை அகற்றினான்.



ரோமர்களின் சின்னங்கள்

2.பிலாத்து செய்த இன்னொரு காரியம் ஆலயத்தில் உள்ள பொக்கிஷங்களைக் கொண்டு எருசலேமுக்குத் தண்ணீர் கொண்டுவர வாய்கால் கட்ட முனைந்தான். ஆலய பொக்கிஷம் மிகவும் தெய்வீகமானது. ஒரு குழு அவனுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்தது. இவனோ அவனின் படைவீரர்களை சாதாரண மக்களைபோல் உடையணிவித்து, ஜனங்களோடு கலந்து தலைவர்களை கடுமையாக அடித்துப்போட்டான்.

காய்பா என்ற தலைமை ஆசாரியன்

கி.பி.18 தொடங்கி 36 வரை காய்பா யூத தலைமை ஆசாரியனாய் இருந்தவன். இவனுக்குமுன் இருந்த ஆசாரியன் அனனியா என்பவனின் மருமகன். தலைமை ஆசாரியன் பதவி, தன்னுடைய நாட்டில் ஒரு யூதனுக்கு கொடுக்கப்படுகிற ஓர் உயர்ந்த பதவி. இயேசு ஒரு மிரட்டலாய் இருக்கிறார் என்று கருதி அவரைக் கொல்ல திட்டம் போட்டவன்.



பிரதான ஆசாரியன் காய்பா





# 3. தேவதூதனின் வருகை

## (லூக்கா 1:5-45 & 57-66.)

லூக்கா 1: 5-25 யோவான்ஸ்நானனின் பிறப்பின் முன் அறிவிப்பு

ஏரோது யூதேயாவின் மன்னனாய் இருக்கும்போது, சகரியா என்ற ஓர் ஆசாரியன் வாழ்ந்து வந்தான். அவனும் அவன் மனைவி எலிசபெத்தும் நல்ல மனிதர்களாய் இருந்து, தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வந்தனர். வயது கடந்த பின்னும் அவர்களுக்குப் பிள்ளை இல்லாமல் இருந்ததினால், கவலைப்பட்டனர்.

ஆசாரிய ஊழியத்தின் முறைமையின்படி சகரியா தேவாலயத்துக்குள் நுழைந்து தூபங்காட்டுவதற்குச் சீட்டைப் பெற்றான்.

தூபங்காட்டுகிற வேளையில் மக்கள் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தனர். அப்பொழுது தேவதூதன்(லூக்கா 1: 13) தூப பீடத்தின் பக்கத்திலே நின்று அவனுக்குக் காட்சியளித்தான். சகரியா கலங்கி ஆச்சரியமடைந்தான். தூதன் அவனை நோக்கிப் “பயப்படாதே” என்றும் “தேவன் உன் ஜெபத்தைக் கேட்டார். உன் மனைவி எலிசபெத்து ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என பெயரிடுவாயாக” என்றான்.

(லூக்கா 1: 14) உனக்குக் களிப்பும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பின் காரணமாக அநேகர் களிகூருவார்கள். அவன் கர்த்தரின் பார்வையில்



எலிசபெத்து குழந்தை பெறும் வயதை கடந்திருந்தாள்



சகரியா தேவாலயத்தில் தூபங்காட்டுதல்



தூதன் காபிரியேல் சகரியாவினிடத்தில் தோன்றுதல்





தேவாலயத்தை விட்டு வெளியே வந்த சகரியாவுக்கு பேசக்கூடாமலிருந்தது



தூதன் மரியாளிடத்தில் தோன்றுதல்

பெரியவனாயிருப்பான். திராட்ச ரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்.

17. அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்பாக நடப்பான் தேவ மக்களைக் கர்த்தருக்கு ஆயத்தப் படுத்துவான்".

18. அப்பொழுது சகரியா தேவ தூதனை நோக்கி, "இதை நான் எதினால் அறிவேன்? நான் முதியவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாய் இருக்கிறாளே" என்றான்.

லூக்கா 1: 19 தேவதூதன் மறுமொழியாக, "நான் காபிரியேல்" "உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் வந்தேன். லூக்கா 1: 20 இதோ தகுந்த காலத்திலே நிறைவேறப் போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால், இவைகள் நிறைவேறும் நாள்வரை நீ பேசக்கூடாமல் ஊமையாய் இருப்பாய்" என்றான்.

லூக்கா 1: 21 மக்கள் சகரியாவுக்குக் காத்திருந்து, அவன் ஆலயத்தில் தாமதித்ததினால் வியப்படைந்தார்கள்.

லூக்கா 1: 22 அவன் வெளியே வந்தபோது, அவர்களிடத்தில் பேசக் கூடாமல் இருந்தான். அதினாலே ஆலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டான் என அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச் சைகைக் காட்டி ஊமையாயிருந்தான்.

சில நாட்களுக்குப் பிறகு, எலிசபெத்து கர்ப்பவதியானாள்.

லூக்கா 1: 26-38 இயேசுவின் பிறப்பின் முன் அறிவிப்பு.
லூக்கா 1: 26 எலிசபெத்து கர்ப்பவதியான ஆறாம் மாதத்தில் தேவன் காபிரியேல் என்னும் தூதனை கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்கு அனுப்பினார்.
27 தாவீதின் வம்சத்தானாலே யோசேப்பு என்கிற பெயருள்ள மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகைக்கு செய்தியை வைத்திருந்தான். அவள் பெயர் மரியாள்.



28 தேவதூதன் அவளிடம் வந்து, "கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னோடு இருக்கிறார்: நீ பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்றான்.



மரியாள் கலக்கம் அடைந்தாள்.

தேவதூதன் அவளை நோக்கி "மரியாளே அஞ்சாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய், நீ கர்ப்பம் தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராய் இருப்பார். அவருடைய பிதா தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யம் என்றும் அழியாது".

அதற்கு மரியாள் "இது எப்படியாகும் நான் கணவனை அறியேனே? என்றாள்.

லூக்கா 1: 35 தூதன் மறுமொழியாக
"பரிசுத்த ஆவி உன்மேல் வரும் தேவனின் பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறப்பவர் தேவ குமாரன் என்னப்படுவார்.
36 உனக்கு உறவினராயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதில் கர்ப்பவதியாய் இருக்கிறார். இது அவளுக்கு ஆறாம் மாதாம். ஆதலால் தேவனால் இயலாத காரியம் ஒன்றும் இல்லை."

அதற்கு மரியாள் "நான் ஆண்டவனின் அடிமை நீர் சொன்னபடியே ஆகக்கடவது" என்றாள்.



தூதன்: மரியாளே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.



பரிசுத்த குமாரனைப் பற்றி தூதன் மரியாளிடம் கூறுதல்



மரியாள் தூதன் சொன்னதைக் குறித்து சிந்திக்கிறாள்



மரியாள் எலிசபெத்துடன் தங்கச் செல்கிறாள்.

பிறகு தேவதூதன் அவளிடமிருந்து போய்விட்டான். தூதன் சொன்னதை குறித்து அவள் யோசித்துக் கொண்டிருந்தாள். தூதன் சொன்னது உண்மையென்றால் என் வாழ்க்கை மாறிவிடும். தேவனின் திட்டத்தில் அவளும் ஒரு முக்கிய பங்காக தேவ குமாரனை இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்தாள்.

ஆனாலும் ஓர் அபாயம் உண்டு. யோசேப்பு அவளை நம்புவானா? இன்னும் திருமணம் செய்வானா? அவளுடைய குடும்பமும் நண்பர்களும் நம்புவார்களா? மோசேயின் நியாயப்பிரமாணப்படி திருமணம் ஆகாதவள் கர்ப்பவதியானால் அவளை கல்லெறிந்து கொல்வர்.

ஆனால் தூதன் அவளுக்கு ஓர் அடையாளம் கொடுத்தான். முதிர்வயதில் எலிசபெத்தும் கர்ப்பவதியாய் இருந்தாள். ஆதலால் மரியாள் அவளை விசாரிக்கச் சென்றாள்.



எலிசபெத்தின் பிள்ளை
களிப்பில் துள்ளிற்று



எலிசபெத் மரியாளைக் கண்டு சந்தோஷ
மடைந்தாள்



மரியாள் எலிசபெத்தோடு தன்
கவலைகளைப் பகிர்ந்துக் கொள்ளுகிறாள்

லூக்கா 1: 39-80 மரியாள் எலிசபெத்தைக் காணச் செல்கிறாள்.

மரியாள் ஆயத்தப்படுத்திக் கொண்டு யூதேயா மலைநாட்டிற்கு எலிசபெத்தைக் காணச் சென்றாள். மரியாள் வீட்டுக்குள் நுழைந்து எலிசபெத்தை வாழ்த்தும்போது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று. பரிசுத்த ஆவியினால் எலிசபெத் நிரப்பப்பட்டு, அவளுக்கு முன் நிற்கும் பெண் தேவகுமாரனின் தாயார் என நினைத்தாள். எலிசபெத் மரியாளைக் கண்டு சந்தோஷம் கொண்டாள்.

லூக்கா 1: 44 “நான் உன்னுடைய வாழ்த்துதலைக் கேட்டபோது, என் வயிற்றிலுள்ள குழந்தை மகிழ்வாய்த் துள்ளிற்று என்றாள். கர்த்தராலே தனக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என மகிழ்ச்சி அடைகிறேன்”. அதற்கு மரியாள், என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகரைத் துதித்து தேவனில் மகிழ்கிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். இது முதல் அனைத்து சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். அவரிடம் பணிபவர்களுக்கும் அன்பாயிருக்கிறவர்களுக்கும் தேவன் எப்போதும் இரக்கம் செய்வார்.

சில நாட்கள் கழித்து மரியாள் எலிசபெத்தோடு தனியாகப் பேசினாள். நான் திருமணத்திற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளேன். சட்டப்படி திருமணத்திற்கு முன் கர்ப்பவதியானால், என்னை கல்லெறிவார்கள். நான் என்ன செய்ய என வினவினாள். எலிசபெத் மரியாளை அணைத்து எங்களோடு தங்கியிரு, நாம் தேவனின் வழிநடத்துதலுக்காய் ஜெபிப்போம் என்றாள்.

“எலிசபெத்தே, ஏன் தேவன் என்னை தெரிந்தெடுத்தார் நான் சாதாரணமானவள்” என மரியாள் வினவினாள். எலிசபெத்து புன்னகைத்து மறு மொழியாக “முதலில் என் குழந்தை பிறகு உன் குழந்தை, தேவன் நமக்குக் காட்டுவார்” என்றாள்.



எலிசபெத் மரியாளைத் தேற்றுகிறாள்



மரியாள் மூன்று மாதம் அவளுடன் தங்கினாள். பிறகு நாசரேத்தில் இருக்கும் தன் இல்லத்திற்குத் திரும்பினாள்.

எலிசபெத் பேறுகாலம் முடிந்து, ஒரு மகனைப் பெற்று அவனுக்கு யோவான் என பெயரிட்டாள், ஏனெனில் இது தூதரின் கட்டளையாக இருந்தது.

இந்தக் கதையைக் கேட்ட ஒவ்வொருவரும், விசேஷ மான காரியம் நடைபெற்றதுமல்லால் தேவன் அப்பிள்ளையோடு இருந்தார் என்றனர்.



எலிசபெத்து ஒரு மகனைப் பெற்றாள்

## கதையில் வரும் பாடங்கள்

1. யோவானின் வாழ்க்கையின் பணி அவன் பிறப்பதற்கு முன்பே கூறப்பட்டுள்ளது. மேசியாவுக்கு வழியை ஆயத்தம் செய்தல். யோவான் இந்த அழைப்பிற்குப் பணிந்தான்.

2. நாசரேத் கலிலேயாவில் உள்ள ஓர் ஏழ்மையான கிராமம். தேவன் ஓர் ஏழ்மையான குடும்பத்து கன்னியை இயேசுவின் அன்னையாகத் தெரிந்தெடுத்தார். பழைய ஏற்பாட்டில்(ஏசாயா 7: 14) சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேற இப்பிறப்பு உண்டானது. ஆவியின் வல்லமையினால் மனித தகப்பன் இல்லாமல் மரியாள் ஒரு மகனைப் பெறுவாள். இயேசு முழுமையாக மனிதனாகவும் பரிசுத்தமாகவும் காணப் பட்டார்.

3. தனக்கு துன்பங்கள் நேரிட இருப்பதை அறிந்தும் மரியாள் தேவதூதன் உரைத்ததை விசுவாசித்து தேவனுடைய திட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்தாள். தேவதூதன் காபிரியேலுக்கு “இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை” என்ற மரியாளின் மறுமொழி நம் அனைவருக்கும் ஒரு பாடம்.

## விவாத்திற்கான கேள்விகள்

1. ஏன் சகரியா அவனுக்கும் அவன் மனைவிக்கும் பிள்ளை பிறக்கும் என்ற தூதனின் செய்தியைச் சந்தேகித்தான்? இந்தக் கட்டத்தில் நீ, சகரியாவின் மீது அனுதாபம் கொள்வாயா அல்லது குறை கூறுகிறாயா?

______________________________

______________________________

2. காபிரியல் தூதனின் செய்திக்கு மரியாளும் சகரியாவும் கொடுத்த மறுமொழிகளை ஒப்பிடும்போது காணும் ஒற்றுமை?

______________________________

வேற்றுமை?

______________________________

3. இந்தக்கதையில் வரும் கீழ்க்காணும் பாத்திர ங்களில் என்ன பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.
   - சகரியா
   - மரியாள்
   - எலிசபெத்து

## விநோதமான செய்தி

### ஏரோது யூதேயா அரசன்.

இது ஏரோது 1 அல்லது ஏரோது மகாராஜாவை குறிக்கிறது.

### தேவனின் ஆலயம்.

சாலமன் கட்டின முதலாவது ஆலயத்தில் ஏரோது ஆலயத்தைக் கட்டினான்.

